

ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்.

ஸ்ரீ குமரவேல்சுவாமி நூல் வரலாறு.

தோத்திர வெண்பா.

JUL 192

# திருத்தப்பத்திரம்.

| பக்கம் | வரி | இப்படி இருப்பதை | இப்படி வாசித்துக்கொள்ள. |
|---|---|---|---|
| | | நூல் வரலாறு | |
| 2 | 24 | மடடும் ... | மட்டும் |
| | | தோத்திர வெண்பா. | |
| 1 | 12 | செல்வா, நன்னேசமுடன் | செல்வா, நன்—னேசமுடன் |
| | 15 | நிறைங்க ... | நிறைந்த |
| 2 | 22 | ாண்க ... | காண்க |
| 3 | 9 | கான்க ... | காண்க |
| 4 | 23 | பெரும ... | பெரும் |
| 7 | 14 | அருனிச் ... | அருளிச் |
| | 15 | அமபலத் ... | அம்பலத் |
| 9 | 11 | நிணையாரை ... | நிணையரை |
| 10 | 24 | என் ஆன்றோர் ... | என ஆன்றோர் |
| 11 | 24 | பொய்ய்ன்பர்க் ... | பொய்யன்பர்க் |
| | 34 | என றும் ... | என் றும் |
| | 37 | "நலத்தீங்கிலுமுன்னை மறந்தறியேன்" | "நலந்தீங்கிலுமுன்னை மறந்த றியேனுன்னாம மென்னா வில் மறந்தறியேன்." |
| 12 | 31 | நினையாது ... | நினையாத |
| 15 | 2 | குமரவெல் ... | குமரவேல் |
| | 12 | வாழ்வப ... | வாழ்வா |
| | 27 | ஒட்டி ... | ஓட்டி |
| 16 | 6 | முற்றுெ ாழித்தருளி ... | முற்றுமொழித்தருளி |
| 19 | 37 | பாத்திடாதே ... | பார்த்திடாதே |
| 21 | 8 | பூதம ... | பூதம் |
| 23 | 23 | சூாதி ... | சோதி |
| 24 | 14 | மிருந்து ... | மிகுர்து |
| | 27 | புட்கல = நிறைவும ... | புட்கலம் = நிறைவு |
| 34 | 12 | கடியே ... | கூடியே |
| | 19 | துறப்பதில்லை ... | திறப்பதில்லை |

உ

சத்குருநாதன் துணை.

சாத்தூர் தாலூகா

விருதுப்பட்டி நகரத்தில்

திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்ற

# ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்

பேரில்

## தோத்திர வெண்பா

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா தளவாய்புரம் மக-ா-ள-ஸ்ரீ சுப்பிரமணிய

முதலியாரவர்கள் குமாரரும், திருநெல்வேலியைச் சார்ந்த

சிந்துபூந்துறை வாசரும்

பென்ஷன் ரிவினியூ இன்ஸ்பெக்டரும்

ஆகிய

**T. S. சீத்தாரப்பமுதலியார்**

இயற்றியது

பாளையங்கோட்டை டார்லிங் அச்சு இயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1920

இதன் விலை அணா 10]

# நூல் வரலாறு

இந்தத் தோத்திர வெண்பா நூல் ஸ்ரீ குமரவேல் சுவாமிகள் பேரில் இயற்றியுள்ளது.

2. ஷ ஸ்ரீ குமரவேல் நாதனின் உற்பத்தி ஸ்தலமும், கால அளவுந் தெரிந்துளோர் இது காறும் யாருங் காண்கிலன்.

3. இந்த நாதன் சில வருடங்களுக்கு முன் சாத்தூர் தாலூகா மீசலூர்க் கிராமத்தில் ஒரு சமுசாரியினுடைய புன்செயிலிருக்கின்ற பழைய சீரணமான மடத்தில் சிலகாலம் வாசஞ்செய்துகொண்டிருந்திருக்கின்றார்கள். அந்த மஹத்துவத்தால் அப்புலக்காரனுக்கு மட்டும் ஒவ்வொரு வருடமும் மற்றப் புலக்காரர்களைப் பார்க்கிலும் இருமடங்கு ஜாஸ்திப்பலன் அந்நிலத்திலிருந்து கிடைத்து அவன் அனுபவித்துக்கொண்டிருந்ததை யான் அறிந்திருக்கின்றேன்.

4. ஷ ஸ்ரீ குமரவேல் நாதனை அந்தச் சீரண்மான மடத்தில் யானும் என்னுடைய நேசர்களிருவர்களுமாக யாங்கள் தூத்துக்குடியில் சீவன முயற்சியாயிருந்த காலத்தில் தரிசனை செய்திருக்கின்றோம். இது சம்பந்தமாய் 22-வது செய்யுளில் குறிப்பாய் தெரிவித்திருக்கின்றேன். அதன்பின்னர் யான் பற்பல இடங்களில் ஜீவன முயற்சியாய் வாசஞ்செய்துகொண்டிருந்து விருதுபட்டிக்கு ஜீவன முயற்சியாய் வந்து அந்நகரத்தில் வாசஞ் செய்துகொண்டிருந்தேன்.

5. அக்காலத்தில் இந்தக் குமரவேல் சுவாமியை விருதுபட்டி நகரவாசியும் எனது நண்பருமான ஒரு பக்தர் மீசலூரிலிருந்து தன் கிரகத்துக்கு அழைத்துக்கொண்டு வந்து அவ்விடத்தில் வைத்துப் பூசித்துப் பணிவிடை செய்து வந்திருக்கின்றனர். இந்நாதன் முதலில் மீசலூரிலும் பின்பு விருதுபட்டி நகரத்திலும் அன்பர்கள் ஆத்மாநந்தத்தை யடைாதுய்யத் தரிசனை தந்துகொண்டிருந்திருக்கின்றார்கள்.

6. அடியேன் விருதுப்பட்டியில் ஜீவன முயற்சியாயிருந்த காலத்தில் அந்நகரத்தில் ஸ்ரீ வயித்தியலிங்கநாதன் திருப்பணி விடை அடியேனுக்கு நினையாப் பிரகாரங் கிடைத்து அந்நாதன் பேரில் தோத்திர வெண்பா நூலொன்று யான் இயற்றிய காலத்

தில் இந்தக் குமரவேல் நாதன்பேரில் இந்தத் தோத்திர வெண்பா நூலையும் யான் இயற்றியிருக்கின்றேன். இந்நாதனையும் அக்காலத்தில் பூசித்துத் தரிசித்து அவர்கள் சந்நிதியில் இந்நூலால் தோத்திரஞ் செய்துகொண்டிருந்திருக்கின்றேன். இப்பொழுதும் இந்நூலால் தோத்திரஞ் செய்து வருகின்றேன்.

7. இந்நூற் செய்யுள்களில் குறிப்பிட்ட சில வாக்கியங்களுக்கு மேற்கோள்களாக எடுத்துக்காட்டியிருக்கின்ற பாடல்கள் தேவாரந், திருவாசகம், கைவல்லியம், ஞானவாசிட்டம், பகவற்கிதை, திருவள்ளுவ நாயனார் குறள், திருமந்திரம் முதலான நூல்களிலிருந்தும், பட்டினத்துப்பிள்ளையார், தாயுமானவர் முதலானவர்கள் பாடல்களிலிருந்தும், அகத்தீசர் முதலான சித்தர்கள் நூல்களிலிருந்தும், திருவிளையாடற் புராணம், திரிசிரபுரந்தல புராணம், காசி கண்டம், பெரியபுராணம், திருக்குற்றாலத் தலபுராணம், பாரதம், சௌந்தரிய லகரி முதலான மற்றும் பாடல்களிலிருந்தும் சம்பந்தப்பட்ட மட்டில் யான் தெரிந்தெடுத்தெழுதியிருக்கின்றேன்.

8. நாதாக்கள் தரிசனையும், பணிவிடையும், அநுக்கிரகமும் அடியேனுக்கு மேலும் மேலும் பெருக உண்டாகும்படிக்குப் பெரியோர்களது ஆசீர்வாதத்தை அடியேன் எந்நாளும் விரும்புகின்றேன்.

9. இந்நூலில் பாக்களைச் செய்யுளிலக்கணத்துக்கிணங்கத் தளைசிதையாமல் பாடியிருக்கின்றேன். ஆனால், பொருள் நன்கு புலப்படும்படி வாசிக்கவேண்டியதற்காக அவசியமான இடங்களில் மட்டும் சந்தி பிரித்து எழுதியிருக்கின்றேன். அப்படியே மேற்கோள்களிலும், இந்நூல் வரலாற்றிலும் எழுதியிருக்கின்றேன்.

10. இந்த அரிய, பெரிய பணியை எனது கல்விவலி, புத்திவலிகொண்டு செயத்துணிந்திலன். ஆனால் சத்குருநாதன் அருள் வலிகொண்டு இயற்றத்துணிந்தனன்.

11. இந்தக் குருநாதனின் திருப்படம் ஒன்று இந்நூல் வரலாற்றின் முன்பாகச் சேர்த்திருக்கின்றேன். சுபம்.

ஓம், தத், சத்.

சிந்துபூந்துறை,
7—7—1919.

T. S. Theetharappa Mudaliar.

உ

# ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்

## தோத்திர வெண்பா.

சீரார் குமரவேல் தேவனை பிரமவித்து
† நாவார் துதிவெண்பா ‡ நன்கிசைக்க— § ஏரார்ந்த
தந்திமுகச் செல்வன் அருட் டாண்மலரே தஞ்சமென்று
புந்திதனில் எப்போதும் போற்று.

---

குமரவேல் ஸ்வாமி, யென்றன் கோமானே நாதா
அமரர்போற் றும்பரனே ஐயா—நிமலா
பெருவாழ்வுஞ் சித்தி, முத்தி பேறனைத்தும் எற்கீ
குருவே, நீ காத்தெனையாட் கொள். க.

மீசலூர் நாதா விமலா குமரவேல்
தேசிகா * எங்கும் நிறை செல்வா, நன்னேசமுடன்
○ நித்தந் தொழுவேன் நினையும் வயித்தியலிங்க
அத்தனையுங் கைகுவித்து || ஆம். உ.

---

† நாவார் = அன்பு நிறைந்த.
‡ நன்கிசைக்க = நன்றாய்ப் பாடுதற்கு.
§ ஏரார்ந்த = அழகு நிறைந்த.

* எங்கு நிறை செல்வா—"காற்றுகி யெங்குங் கலந்தாய் போற்றி". என்றும், "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே". என்றும், "ஊனாயுயிரானாயுட லானாயுலகானாய், வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய், தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு, ளானாய்". என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.
○ நித்தந்தொழுவேன் —"தெய்வத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்".என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

|| ஆம் = அசைச்சொல்.

¶ கல்மிதக்கக் கைகாட்டுங் கண்ணே குமரவேல்
அல்பகல்எந் நேரமும்யான் அத்தாநின் — § சொல்லே
துதிக்கும் பதம்பெற்றுத் தொண்டுசெய்வேன் என்றும்
‡ மதிப்பேன்நின் பொன்னுருவம் வாய்ந்து. ௩

§ மனவாக்கால் காணவொணா மாண்புடைய ஞானத்
தினகரனே * பத்திமிக்கோர் செல்வா — என்னையாளுங்
கோவே ( நல் ஈகைக் குணத்தோர் குமரவேல்
தேவே, நின் தொண்டர், அன்றோ செப்பு. ௪

---

¶ கல்மிதக்கக் கைகாட்டும்.—"சொற்றுணை வேதியன் சோதிவானவன், பொற்றுணை திருந்தடி பொருந்தக்கை தொழக், கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும, நற்றுணை யாவது நமச்சிவாயவே.' என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. § சொல்லே=புகழையே—துதிக்கும் பதம்பெற்றுத் தொண்டுசெய்வேன். "நானே யோதவஞ்செய்தேன் சிவாய நம வெனப்பெற்றேன், தேனு மின்ன முதமுமாய்த் தித்திக்குஞ் சிவ பெருமான்; றானே வந்தென துள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ‡ மதிப்பேன்=கருதுவேன்;எண்ணுவேன்.-மதிப்பேனின் பொன்னுருவம் — "ஒப்பரிய திருக்கோலம் உணர்தோறும் உணர்தோறும், செப்பரிய பெருங்களிப்பென் சிந்தையுளே திகழுமால்." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

§ மனவாக்காற் காணவொணா மாண்புடைய.—"சித்தமுஞ் செல்லாச் † சேட்சியன் காண்க." என்றும்,"சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க." என்றும் ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. * பத்திமிக்கோர் செல்வா.—"பத்திவலையிற் படுவோன் காண்க." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ( நல்லீகைக் குணத்தோர்.- "அல்லல் வெவ்வினையால் இன்னம் உற்பவமுண்டாயினும் எழுமை பிறப்பும், இல்லையென்றிரப்போர்க் கில்லையென்றுரையா இதையம் நீ யளித்தருள் என்றான்." என்றும, "எத்தனை பிறவி யெடுக்கினும் அவற்றுள் ஈகையுஞ் செல்வமும்மயதி, முத்தியும் பெறுதி முடிவிலென்றுரைத்தான் மூவரும் ஒருவனும் மூர்த்தி." என்றும், "நன்குடைய காலத்தே நல்லிடத்தே நல்லவர்க்குத், தன் பொருளைக் கொடுக்கும் அது சாத்துவிகதானமே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

† சேட்சி= தூரம்.

எந்தாய் குமரவேல் ஈச்சுரனே நாயேற்குச்
சிந்தை கலங்காத ¶ செல்வமெலாந்— தந்தருளி
ψ மைவிழியார் வஞ்ச மயக்கமின்றி மைந்தா நீ
உய்வாயுய் வாயென் றுரை. ரு.

---

¶ செல்வமெலாந் தந்து —"அடியேனை யாவரும்—பெற் றறியா இன்பத்துள் வைத்தாய்க் கென்னெம் பெருமான், மற்றறி யேன் செய்யும் வகை." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின் றனர் காண்க. ψ மைவிழியார் வஞ்சமயக்கமின்றி மைந்தா நீயுய் வாய்.—"பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணு விடர்ப்பட்டு, † நெஞ்சாயதுயர்கூர நிற்பேன் உன்னருள் பெற்றேன், உய்ஞ்சேன் நான் உடையானை அடியேனை வருகவென், றஞ்சேலென் றருளிய வாரூர் பெறுவாரச் சோவே." என்றும், "பஞ்சாய அடிமட வார் கடைக்கண்ணுவிடர்ப்பட்டு, நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின் னருளால், உய்ஞ்சேன் எம்பெருமானே உடையானே அடியேனை, அஞ்சேலென்றுண்ட வாறன்றே யம்பலத்தமுதே." என்றும், "மாயமயக் கொழிந்தார் மற்றொன்றை நாடுவரோ, தூயவருட் பற்றாய்த்துடர்வார் பராபரமே." என்றும், "தந்தையாயினும் விழைவிற்றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும், மைந்த ராயினும் மிகவும் வனப்புடைய ரெனிலவர் மேல்மட நல்லார்தஞ், சிந்தை நடந்திடும் அதனாற் சாம்பன் மலர்க்கணைவேளிற் செவ்வி வாய்ந்தோன், பைந்தொடியார் இனிதமரும் ‡ உவளகத்திற் றனிவருதல் பான்மையன்றே." என்றும், "மாதாகையர்தங், கூறு மலமுமிரத்தமுஞ் சேருங் குழியில்விழா, தேறுப்படிக்கருள்வாய் இறைவா கச்சியே கம்பனே." என்றும், "தேனார் மொழியார் விழிவழியே செல்லாதவர்க்கு வீடென்று, நானா வேதப் பொரு ளுரைத்தாய் நீயே மதுரை நம்பரனே." என்றும், "கற்பின் மங் கையர் நெறியெனும் வரம்பினைக் கடந்தால், உற்பலஞ்செறிமாலை யாம் விலக்குவாருண்டோ." என்றும், "உய்குவாய் பெண்ணரவங் கடியாவண்ணம் உளமை யென்ற நடுத்தியை அதிகங்கொண்டாற், பை § குவாய் அரவு விஷம் $ பொசுங்கிப்போகும் பங்கம் உனக்கில்லையடா." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக் கின்றனர் காண்க.

† நெஞ்சாய துயர்கூர = மனத்துன்பம் அதிகப்பட.

‡ உவளகம் = அந்தப்புரம்.

§ கு = சாரியை ; சார்ந்துவரும் இடைச்சொல்

$ பொசுங்கி = கருகி.

அரும்பொன்னே § தோகையர்கள் ஆசைவிட்டோர் நேசம்
விரும்புகின்றேன் ‡ பொல்லார்க்கு வேதப்—பெரும்பயனை
நானுரைக்கேன் ஓர்நாளும் நாதா குமரவேல்
வானவனே என் குருவாய் வாழ். ௬.

---

§ தோகையர்களாசைவிட்டோர்.—"பித்துக்குட் பாவமென்ன புண்ணியந்தானென்ன வெகுகோடி புண்ணியத்தாற் புருஷசென்மம் ஐயா, பத்துக்குள் வெகுகோடி பாவம்பண்ணிப் பாழான பெண் சென்னமெடுத்தவாறு, † குத்திப் பேசுவதறிந்தும் பாவமான குழியிற்குள் விழுவார்கள் மானிடர்கள் ஐயோ, இத்தனையும் அறிந்துகொண்டு வேறாய் நின்று இகழ்ந்தவனே மெய்ஞ்ஞானியிசனுமே." என்றும், "சாற்றுகிறேன் வீதியிலே படுகுழிதானென்று அதன்மேலே புல்லோடு செடிதான் மூடி, மாற்றியதை வீதியென்று நடந்தோர் வீழ்ந்தவாறிருக்கும் பெண்ணை மாய்கைக் கூற்றம், மாற்றுகிறேனென்றாலும் மாற்றப்போகா மகாகொடிது பெண்ணரவு கடித்ததானால்." என்றும், "வாராய் நீ கேள் மகனே பெண்ணாற் சிக்கி மகத்தான ரிஷிசித்தர் கோடிபேர் கெட்டார்." என்றும், "தெளிவதுதானெளிதல்ல வாய்ப்பேச்சோ ஞானஞ் சிங்காரப் பெண்கண்டால் ஞானம் போச்சு." என்றும், "அறிவாருமில்லையே ஐயோ என்னை யாரென்றறியாத அங்க தேசத்தில், வறிதேகாமத்தியிற்சிக்கியுள்ள வான்பொருள் தோற்கவோ வந்தேன் நான் தோழி." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ‡ பொல்லார்க்கு வேதப்பெரும பயனை நானுரைக்கேன்.—"மற்றுனக்குச் சொல்லிய இம்மறைப் பொருள் மாதவமிலர்க்கும், குற்றம் அறுத்தறிவளிக்குங் குருவழி பாடிலாதவர்க்குஞ், செற்ற மனச்சளக்கர்க்கும் எனை நினையாத் திறத்தவர்க்கும், அற்றம் அறத்தெரிந்துரைக்கையடாதென்றே அறிகண்டாய்." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

† குத்திப் பேசுவது = உரோசம் வரப்பேசல்; இடித்துரைத்தல்.

பொய்யுரையார் ‡ சூது புகலார் § துன் மார்க்கமுள
தையலர்கள் மையலிலே தாழ்ந்துவிழார்—ஐயன்
குமரவேல் நற்றொண்டர் கொள்கையிவை அண்ணல்
அமரர் குரு வாக்கிதுவே ஆம். எ.

---

‡ சூது புகலார்.—"வாக்குமனம் ஒன்றுபட்ட வார்த்தையல்லால் வெவ்வேறுய்ப், போக்குடைய வார்த்தை பொருந்தேன் பராபரமே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. § துன்மார்க்கமுள தையலர்கள் மையலிலே தாழ்ந்து விழார்,—"காமத்தில் மனதானல், கொள்ளும் பெண்டோடு கலவி செய்யெனில் இவன் குறையெலாந் தொடான் என்றே, தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகல முந்தவிர்வதே கருத்தாகும்" என்றும், "துன்மார்க்க மாதர் மயக்கம் மனத்தூயர்க்குப் பற்றுது சொன்னேன் சனகன், தன்மார்க்க நீதி திட்டாந்தம்." என்றும், "என் பெலாங் கசிந்துருகும் இற்பிறந்தாரல்லாமல், அன்பிலாப்பொது மாதர் ஆபத்துக்காவாரோ." என்றும், "சுரும்ப விழுங்குழன் மடவார் கடைக்கண்ணோக்கில் $ துளங்காத சிந்தையராய்த் துறந்தோருள்ளப், பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானை." என்றும், "மை விழியாளாசையில் வீழாதே, யிந்த, மாய்கைதனிலுடல் கெட்டு நீ யழுந்தாதே." என்றும், "மோகத்தின் கனலில் வீழாமுனைசுழிவாசி பார்த்தால், ஏகத்தான் நாகைநாதர் இணையடி சேர்வாய் நெஞ்சே." என்றும், "மானனை விழி மடவார் போகத்தாலே வருகின்ற நோயப்பா மயங்கவேண்டாந், தேனனை மொழி மாதர்க் கிச்சைகொண்டால் தேகத்தில் நோய்களெல்லாஞ் சேருந்தானே." என்றும், "உன்றனுட விந்திழந்தால் எல்லாம் போச்சு உண்டதெல்லாம் பாழாச்சு உரமும் போச்சு, விந்துதனை யிழந்து பல பிணிக்குள்ளாகி மெலிந்து கெட்டுப்போகாதே விள்கின்றேனே." என்றும், * "தெட்டி மேல் வலிய மடமாதர் வாய்வெட்டிலே சிற்றிடையிலே நடையிலே, சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே சிறு பிறை நுதற் கீற்றிலே, பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்தபொடியிலே அடியிலேமேற், பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே புந்திதனை நுழையவிட்டு, நெட்டிலே யலையாமல் அறிவிலே பொறையிலே நின்னடியர் கூட்டத்திலே, நிலைபெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞானஞேயத்திலே யுனிரு தாள், மட்டிலே மனது செல நினதருளும் அருள்வையோவள மருவு தேவையரசே, வரைராஜனுக் கிருகண் மணியா யுதித்த மலைவளர் காதலிப் பெணுமையே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

$ துளங்காத=கலங்காத

* தெட்டிலே=எத்துதலிலே; வஞ்சித்தலிலே.

† சித்தந் தெளிந் ‡ திந்தத் தேகத்தே சித்திதரும்
வித்தை பெறவே விருப்புற்றேன்—நித்தமும் நான்
* வாசி நிலைபெற்று வாழக் குமரவேல்
தேசிக, நீ எற்கருளிச் செய். அ.

† சித்தந்தெளிந்து —“சித்தந்தெளிந்து சிவமானோ ரெல்லோர்க்கும், கொத்தடிமை யானகுடி நான் பராபரமே.” என்றும், “விந்து விருந்ததலந் தனிலே குரு நந்திபிருந்தார் கொலுவாகச், சிந்தை யடக்கி மகாரம் வைத்தால் அந்தச் சீமானைக் காணலாம் ஞானப்பெண்ணே.” என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ‡ இந்தத் தேகத்தே சித்திதரும் வித்தை.—“பாரக்கிற் பிரமா வெழுத்தைத், திடைத்துச் சிரஞ்சீவியாய்த் துலங்குவிப்பாய் பூரணமே.” என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. * வாசி நிலைபெற்று — “அங்கே நெற்றி நடுமையஞ் சுவாசத்தை யொட்டி.” என்றும், “குருவினுற் குறியைப் பார்த்துக் குண்டலிவழியே சென்றங், குருவினுனைக நாதருண்மையை யுணர்வாய் நெஞ்சே.” என்றும், “மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக், காலாலெழுப்புங் கருத்தறிவித்து.” என்றும், “வாரணனயன் மால் ருத்திரன் மகேசுரன் சதாசிவன்ருன், காரணம் ஆறுவீட்டிற் கலந்தவரிருக்கும் அப்பால், பூரண நிராதாரத்தின் புதுமையுங் கண்டு போற்றி, ஆரண நாகை நாதாடியிணை தொழுவாய் நெஞ்சே.” என்றும், “நடக்கிலும் வாசிபாரு நாட்டமும் வாசிபாரு, முடக்கிலும் வாசிபாரு முனைசுழி வாசிபாரு.” என்றும், “வேகமுடன் பிராணவாயுவைத்தான் வாங்கி மெல்ல விட்டாற் சேலகும் பகமாஞ் சொன்னேன், வாகாக இப்படியே செய்து சித்தாரானர்.” என்றும், “செய்யலாமிருக்கையிலும் நடக்கையிலுந்தானே.” என்றும், “பிறந்திடு மிருபத்தோராயிரத்தறு நூறுபேரு, மிறந்து யிக்காயம் போனு லீசனைக்காண்பதெந்நாள், மறந்திடாதறிவால் மூலவாசியை மேலையேற்றிச், சிறந்த சிற்பரத்து நாகைலிங்கரைத்தரிசி நெஞ்சே.” என்றும், “உலகத்தில் மானிடர்க்கு ஆண்டு நூறு, ஆம் என்றும் இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசமல்லோ ஓர் நாளைக்குப்போம், போமென்று போனதினுல் நாட் குறைந்து போச்சுப் போகாவிட்டாற் போவதில்லைப் § பூண்டுபாரு, காமொன்று நினைக்கையிலே தெய்வமொன்று தானினைக்க தன்மையல்லோ விதியன்ருனே.” என்றும், “விதியல்லோ மதியாச்சு வேறேயுண்டோ.” என்றும், “நாமுரைத்த பிரம சிருஷ்டிகருமிக்கில்லை நாதனுருமைக்குரைத்தார் நாஞ்சொன்னமே.” என்றும், “இந்தச் செகச்சாலக் கூத்திலே தெளிவாகி யாடு, § பாங்கான சுழிமுனையை நாடு.” என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய் திருக்கின்றனர் காண்க

§ பூண்டு = அடைத்து; உட்படுத்தி.
§ பாங்கான = தகுதியான; பெருமையான.

† சிந்தை அடக்கிக் குமரவேல் சேவடிமுன்
வந்து ¶ தியானித்து || வந்திப்பேன்—எந்தவிதத்
§ துட்டரையும் நான் மதியேன் ‡ தூய அறிவிலாத்
துட்டரைப்பூ சிப்பரெனச் சொல். ௬.

எந்தை $ உனதருளால் என் கருத்தெல் லாமுடிக்கச்
சிந்தை மகிழ்ந்திருக்கச் செய்வித்துச்—சந்ததமுங்
○ கோயிலாய் என் மனத்தைக் கொள்வாய் குமரவேல்
* தாயுமென தையனுநீ தான். ௭.

---

† சிந்தையடக்கி.—"அலையும் மனத்தையகத்தடக்கும் அவனே சரியை கடந்தோனும், அலையும் மனத்தையகத்தடக்கும் அவனே கிரியை முடிந்தோனும், அலையும் மனத்தையகத்தடக்கும் அவனே யோக தற்பரனும், அலையும் மனத்தையகத்தடக்கும் அவனே ஞானி அதிசூரன்." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ¶ தியானித்து.—"அம்பலத்தாடியையைந் தெழுந்தாற், செபியாமல் நீ செபித்தாற் பிறவா முத்தி சித்திக்குமே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. || வந்திப்பேன் = வணங்குவேன். § துட்டரையும் நான் மதியேன்.—"துர்ச்சனராய்த் திரிவாரோடிணங்கவேண்டாம்." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க ‡ தூய அறிவிலாத்துட்டரைப் பூசிப்பர்.—"மானபத்திர மகாராஜராஜனே, தீனியற்ற மற்றுபலனேவினுன், ஞானமுற்றியே வறுமை நோயெய்திலன், ஈனதுட்டரை யன்றோயிவர்போற்றுவார்". என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

$ உனதருளாலென் கருத்தெல்லாமுடிக்க.—"அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம், முடியா முதலே யென் கருத்து முடியும்வண்ணம் முன்னின்றே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ○ கோயிலா யென் மனத்தைக் கொள்வாய்—"பனைக்கை மும்மதவேழ முரித்தவன், நினைப்பவர் மனங் கோயிலாக்கொண்டவன்." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. * தாயுமெனதையனுநீ—"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்தவாரமுதே" என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

ψ அமரர் முதலோர் அளவிட் டறியாக்
குமரவேல் நாதா, பொற் குன்றே—நிமலா, நற்
‡ றொண்டர் பதம்பணிந்து $ துட்டர்களை விலக்கி
|| அண்டி நிற்பேன் நின்றாட்கீழ் * ஆல் ௬௪.

---

ψ அமரர் முதலோரளவிட்டறியா.—"உம்பராலு மூலகி னவராலுந், தம்பெருமையளத்தற்கரியான்." என ஆன்றோர் அருளிச்செய் திருக்கின்றனர் காண்க. ‡ தொண்டர் பதம் பணிந்து.—"கூடி மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி." என்றும், "கங்கையார் சடைக்கணிந்தார்க்கன் பராகிலவர்கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. $ துட்டர்களை விலக்கி.—"நல்லிணக்கமில்லாரோடிணங்கவேண்டாம்." என்றும், "முன்கோபக்காரரோடிணங்கவேண்டாம்." என்றும், "சேராமற் சிற்றினத்தைப் பிரித்தெந்நாளும் திருவடிப்பேரினத்துடனே." என்றும், "கற்குணத்தைப் போன்ற வஞ்சக்காரர்கள் கைகோவாமல், நற்குணத்தார் கைகோத்து நான்றிரிவதெந்நாளோ." என்றும், "ஆயிரஞ் சொன்னாலும் அறியாத வஞ்சநெஞ்சப், பேயரோடுங் கூடிற் பிழைகாண் பராபரமே." என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. || அண்டி நிற்பேனின்றாட்கீழ்.—"விண்ணவன்றாளென்னும் விரிநிலா மண்டபத்திற், றண்ணீரருந்தித் தளர்வொழிவதெந்நாளோ." என்றும், "மாசில் வீணையும் மாலை ○ மதியமும், வீசுதென்றலும் () வீங்கிளவேனிலும், ● மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தையிணையடி நீழலே." என்றும், ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

* ஆல் = அசைச்சொல்.

○ மதியம் = சந்திரன்.

() வீங்கு = மிகுந்த.

● மூசு = மொய்க்கப்பட்ட.

℘ நெஞ்சார நின்னை நினைவேனை நித்தமுமே
§ அஞ்சா திருக்க அருள்புரியுங்—கஞ்சமலர்ப்
பாதா குமரவேல் $ பண்டே, நான் கைதொழுத
நாதா || நின் அன்பர்பணி நல்கு. ௰௨.

எனைக்காத்தாட் கொள்ளுங் குமரவேல் ● எந்தை
தனக்குவமை தானுய், என் றாயாய்த்—தனதுபொற்றாள்
பாடி = அதன் கீழ்வாழ் பதம் அளித்தான் ℘ பாக்கியங்கள்
தேடிவரும் நன்மனமே தேர். ௰௩.

---

℘ நெஞ்சார நின்னை நினைவேனை.—"சிவன் பாதம் நினை, நினைப்போரை மேவு நினையாரை நீங்கின்னெறியினின்று, அனைப் போலொருவரில்லை மனமே யெனக்குற்றவரோ." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. § அஞ்சாதிருக்க அருள் புரியும். "அஞ்சலஞ்சலென்றடிமைக்கப்போதைக்கப்போதே, நெஞ்சிலுணர்த்தும் நிறைவே பராபரமே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. $ பண்டே நான் கைதொழுத.—"பண்டொருகானின் பாற்பழக்க முண்டோ எந்தை நின்னைக், கண்டொருகாற் போற்றக்கருத்துங் கருதியதே." என்றும், "பண்டேயென் சிந்தைபுகுந்தாய் போற்றி." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க || நின்னன்பர்பணி.—"அன்பர்பணி செய்ய வென்னையாளாக்கிவிட்டு விட்டா, லின்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே." என்றும், "பத்தருந்தும் பரம சுகம் யானருந்த, எத்தனைநாட் செல்லுமியம்பாய் பராபரமே." என்றும் ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

● எந்தை தனக்குவமை தானுயென் றாயாய்.—"உவமிக்கின் மெய்யே, யுன்னை யொப்பாய்மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே, அன்னையொப்பாய் எனக்கத்தனொப்பாய் என்னரும் பொருளே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. = அதன் கீழ் வாழ்பதம்.—"ஞானநூல்தனை யோதல், ஓது வித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல் நன்று; பீனமிலாப் பொருள்தனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவன் அடி அடைவிக்கும எழில் ஞானபூசை." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ℘ பாக்கியங்கள் தேடிவரும்.—"பொன்முடியான் முக்கட்புனிதன் சரண்புகுந்தோர்க், கென்முடியாதேதுமுளதே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

கோடி ரவிபோல் ஒளிருங் குமரவேல்
$ நாடி உணராது நான்சேர்த்த ‖ மூட, துட்டக்
கூட்டம் எனை நீங்கக் குருபதம் நான் போற்ற, என்றும்
§ நாட்டிவைப்பாய் நின் ‡ விருது நன்கு ௧௪.

உய்யும் வழிபார்த் துருகி ¶ மனம் அடக்கிக்
கையும் சிரங்கூப்பிக் காதலிப்பேன்— ‡ மெய்யடியார்
சிந்தை குடிகொள்ளுந் தேவன் குமரவேல்
ψ எந்தை பதம்மறவேன் யான். ௧௫.

---

$ நாடியுணராது = விசாரித்தப்பாராது. ‖. மூடதுட்டக் கூட்டமெனை நீங்க.—"வீணருடன் கிட்டேன் அவருரை கேட்டு மிரேன்." என்றும், "மாற்றானையுறவென்று நம்பவேண்டாம்" என்றும் "வஞ்சனை பலவுந்தீர்ப்பாய் ஜெய ஜெய." என்றும் "சினத்திருந்தார் வாசல் வழிசெல்லவேண்டாம்." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க § நாட்டிவைப்பாய் = தாபிப்பாய். ‡ விருது = ஒரு அடையாளம்; ஒரு கொடி.

¶ மனமடக்கி.—"மடைவாயிற் பட்சிபோல மனந்தனையடக்கி." என்றும், "ஐந்தவித்தானாற்றலகல்விசும் புளார் கோமா, னிந்திரனே சாலுங்கரி." என்றும், "ஆடியகறங்கு போலோடியுழல் சிந்தையையடக்கி யொருகணமேனும் யான், காணிலேன் றிருவருளை." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ‡ மெய்யடியார் சிந்தை குடிகொள்ளுந்தேவன்.—"சித்தமாரத்திருவடியே, யுள்கி நினைந்தெழுவாருள்ளம் மேயவன் காண்." என் ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ψ எந்தை பதமறவேன்.—"அறமார் புகழ்தில்லை யம்பலவாணரடிக் கமலம், மறவாதிருமனமே" என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

¶ குற்றங்கள் நீக்கிக் குணத்தினைக்கைக்கொண்டு § நல்லோர்
சொற்றநூல் கற்கில் ௰ சுகம், பெரிய—குற்றஞ்
$ சிறியோர் செய்தாலும் குமரவேல் தேவா
பெரியோர் சகிப்பாரோ பேசு. ௬௬

† மெய்யன்பர் போற்றுகின்ற மிக்கோன் குமரவேல்
வையமெல்லாங் காக்கின்ற மாதேவன்—ஐயன்
‡ நினைவைச் சதா, நனவில் நித்திரையில் பூண்பேன்
§ மனம்வாக் கெலாம்இவன்வாழ் வான். ௬௭

---

¶ குற்றங்கணீக்கிக் குணத்தினைக்கைக்கொண்டு.—"குற்றங் குறையக் குணமேலிடவருளே, யுற்றவரே யாக்குறவாம் பாராபரமே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. § நல்லோர் சொற்றநூல் கற்கிற் சுகம்—'கல்லெறியப் பாசி கலைந்து நன்னீர் காணும் நல்லோர், சொல்லுணர்வால் ஞானம் வந்து தோன்றும் பராபரமே." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ௰ சுகம்=முத்தி. $சிறியோர் செய்தாலுங் குமரவேல் தேவா, பெரியோர் சகிப்பாரோ.—"சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம், பெரியோராயிற் பொறுப்பது கடனே." என்றும், "சிறியோர் பெரும்பிழை செய்தனராயிற், பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே." என்றும் ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

† மெய்யன்பர் போற்றுகின்ற.—"மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தவிசைக்குழலோசை, வையந்தன்னையும் மறைத்து வானுந்தன் வசமாக்கிப் பொய்யன்பர்க் கெட்டாத பொற்பொதுவி னடம் புரியும், ஐயன்றன்றிருச் செவிக்கே யருகணையப்புக்கியவால்." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ‡ நினைவைச் சதா நனவினித் திரையிற் பூண்பேன்.—"நித்திரையாய் வந்து நினைவழிக்குங் கேவலமாஞ், சத்துருவை வெல்லுஞ்சமர்த்தறிவதென்னாளோ." என்றும், "தூங்கி விழித்தென்ன பலன் றூங்காமற் றூங்குகின்ற, பாங்கு கண்டாலன்றோ பலன் காண்பராபரமே." என்றும், "சுகானந்தத் தூக்கத்திலே, யல்லும்பகலுமிருப்பதென்றோ கைலாயத்தனே." என்றும், "சாக்கிரதமாகவே, தூங்காமற்றூங்கியே சுகமடைந்து தொந், தோந், நொந், தோம் எனருடாய் பாம்பே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. § மனம் வாக்கெலாமிவன்வாழ்வான்—"நெஞ்சமுமக்கேயிடமாக வைத்தேனினை யாதொரு போதுமிருந்தறியேன்." என்றும், "நலந்தீங்கிலு முன்னைமறந்தறியேன்." என்றும் ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

‡ நற்குணங்க ளானவெலாம் நாயேற்குத் தந்தருளுஞ்
சற்குணனே $ பாண்டரங்கா சாற்றரிய—நிர்க்குணனே
வல்லானே தேவா குமரவேல் மாமுனியே
* எல்லாம் நின் தன்செயலே ஈங்கு. ௪௮.

---

‡ நற்குணங்களானவெலாம்.—"கூசிபிடா திட்ட பணிசெய்து குருபத்தி குறைவிலராய் நம்பினரைத் துரோகமின்றி, மாசிலராய் மனவாக்குக் காயத்தாற் குருவின் வாக்கிய பாலனஞ்செய்யும் மதிமானுமாமே." என்றும், "ஆதரவுஞ் சாந்தியும் நற்பொறுமை தானும் அசத்தியமில்லாவுரையும் ஆசாரந்தவமும், தீதான செயன் மறந்து நன்றியறிந்திடலுஞ் சிவாகமத்தைக் கேட்டதனைத் தெளிதரலும், போதலறப் பொறிவழியினிற்றலாதி புகன்றுடைய நற்குணங்கள் பொருந்தி மேலும்." என்றும், "நன்மங்கையரைத் தாய் போற்கருதித் § தமர்போலனைவர்க்குந் தாழ்மைசொல்லிச், சேய்போலிருப்பர் கண்மருண்மை ஞானந்தெளிந்தவரே." என்றும், "மேலநிலை கண்டார்கள் வீணாய் வீம்பு பேசிடார் மெய்யன் பதம் நாடுவார் என்றுடாய் பாம்பே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. $ பாண்டரங்கா=சிவனே.

* எல்லாம் நின்றன் செயலே.—"தளர்வு வந்தெய்தில் விதியினை நோவர் தழைக்குஞ் செல்வக் கிளர்வு வந்தெய்திற்றமைத்தாம் புகழ்வர் கிளைத்த பசுந், தளவு வந்தானு முள்ளிவந்தானுந் துதித்து நிற்கக் களவு வந்தான் செய்த கற்பனையிதென்று காண்கிலரே." என்றும், "இருவினைப் பாசக்கயிற்றின்வழி, யாட்டுவிப்பானுமொருவனுண்டே தில்லை யம்பலத்தே" என்றும், "சூடகத்தளிர்க்கை பாகா சோமசுந்தரனே கூட, லாடகக்குன்றே யென்னையாட்டிவைத்தனை நன்றாமே." என்றும், "தில்லையுண்ணிறைந்த, கத்தாவின் சொற்படியல்லாது வேறில்லை கன்மங்களே." என்று', "நன்மையுந் தீமையும் பங்கயத்தோ, னெழுதாப்படி வருமோ சலியாதிரென்னேழை நெஞ்சே." என்றும், "ஒன்று நினைக்கிலதுவொழிந்திட்டொன்றாகும், அன்றியது வரினும் வந்தெய்தும்—ஒன்றும்—நினையாது முன் வந்து நிற்பினும் நிற்கும், எனையாளும் ஈசன் செயல்." என்றும், "என் செயலாவதி யாதொன்றுமில்லையினித் தெய்வமே, யுன் செயலே யென்றுணரப்பெற்றேன்." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

§ தமர் = மூடர்.

ஆரா அமுதே அடியேன்றன் பூமியெலாஞ்
சீரார் விளைவு செழிக்க அருள்—¶ நாரார்ந்த
அன்பர்பணிக் கின்புதவும் அத்தா குமரவேல்
என்குரு ꝩ நின் பொற்பணியெற் கீ. ௰௬.

இன்பம்நலம் எற்களிக்கும் எந்தாய் குமரவேல்
என்பெலாம் = நெக்குருகி வத்துகின்ற—அன்பன் எற்கு
§ அஞ்சலென்ற வாக்கை அளித்தருள்வாய் ‖ சற்குரு நீ
தஞ்சம், என்றே வாழ்வேன்யான் ‡ தான். ௰௭.

---

¶ நாரார்ந்த = அன்புநிறைந்த. ꝩ நின்பொற்பணி.—"ஆமா றுன்றிருவடிக்கே யகங்குழையேன் அன்புருகேன், பூமாலை கொண்டேத்தேன் புனைந்துரையென் புத்தேளிர், கோமானின்றி ருக்கோயிறூகேன் மெழுகேன் கூத்தாடேன்" என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

= நெக்குருகியேத்துகின்ற.— ○ "நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும் பொன்னார்சடைப்புண்ணியன்." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. § அஞ்ச லென்ற வாக்கையளித்தருள்வாய்—"பஞ்சரித்து நின்னைப்பல கால்விரந்ததெல்லாம், அஞ்சலெனும் பொருட்டே யன்றோபராபர மே" என்றும், † "செய்யனே திருவாலவாய் மேவிய, ஐயனே அஞ்சலென்றருள் செய்." என்றும், "அடியேனை அஞ்சலென்றாய் ஆவடுதண் துறையுறையும் அமரரேறே;" என்றும், "நின்னருளால், உய்ஞ்சேன் எம்பெருமானே உடையானே அடியேனை, அஞ்சே லென்றாண்டவாறன்றே யம்பலத்தமுதே." என்றும், "பஞ்சேரடி யாள் பாகத்தொருவா பவளத்திருவாயால், அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே" என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ‖ சற்குரு—"ஞான நெறிக்கேற்ற குரு நண்ணரியசித்தி முத்தி தானந் தருமந் தழைத்த குரு—மானமொடு தாயெனவும் வந்தெனைத் தந்த குரு வெண்சிந்தை, கோயிலென வாழுங் குரு." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

‡ தான் = அசைச்சொல்.
○ நெக்கு நெக்கு = உருகியுருகி; கனிந்து கனிந்து.
† செய்யனே = சிவனே.

$ என்றன் குலதெய்வம் எந்தை குமரவேல்
என்று மலர்தூவி எந்நாளும் — நின்றன்பொற்
பாதஞ் சதாபோற்றும் * பத்தரைக்கண் டால் அவரென்
நாதன் எனத்தொழுவேன் நான். ௨௰௬

அண்டர்பணி தேவா குமரவேல் அத்த † எங்குங்
கண்டவெலாம் நீ யென்றே கைகுவித்துப் — பண்டொருநாள்
‡ அன்புநிறை நன்மனம்பெற் றந்நாள் முதற்றொடர்ந்து
§ நின் பணிக்கா ளானேனன் நிசம் ௨௰௭

---

$ என்றன் குலதெய்வம். — "அடியார்க்கெளியவரம் பலவாணரடி பணிந்தால், ‡ மடியாமற் செல்வவரம் பெறலாம் வையமேழளந்த, நெடியோனும் வேதனுங் காணு நித்தனி மலனருட், குடிகாணும் நாங்கள் அவர் காணும் எங்கள் குலதெய்வமே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க * பத்தரைக் கண்டாலவரென்னுதனெனத்தொழுவேன். — "கண்ணுணின்ற வொளியைக் கருத்தினை, விண்ணுனின்று விளங்கிய மெய்யினை, யெண்ணி யெண்ணியிரவும் பகலுமே, நண்ணுகின்றவர் நான்றொழுந் தெய்வமே." என்றும், "பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கும் அடியேன், பரமனையே பாடுவாரடி யார்க்கும் அடியேன், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்." என்றும், "பத்தர் பலர் போற்றும் பரமா பழயனூர் மேய, அத்தா ஆலங்காடா உன் அடியார்க்கடியேன் ஆவேனே." என்றும், "வள்ளற் பரமன்றிருநீறும் அணியும் அணிந்தமாண்பினரை, யுள்ளத்துள்ளேயிருபோதும் உணர்ந்து தெருண்டு சிவனெனவே, கொள்ளத்தகைய அறிவின்றே பிறவிக்கடலிற் குளியாதார்." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ‡ மடியாமல் = கேடில்லாமல்.

† எங்குங் கண்டவெலா நீ யென்றே கைகுவித்து. — "கண்டவடிவெல்லா நின் காட்சியென்றே கைகுவித்துப், பண்டுமின்று நின்றவென்னைப் பார்த்திரங்க வேண்டாவோ." என்றும், "முதல்வனுர் பேரைப் பலசோடியாக மொழிந்திடுவார் ஏக வஸ்து ஒன்று காணே." என்றும், "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யங்கண், மாதொரு பாகனுர் தாம் வருகுவார்." என்றும், "ஆருருவ உள்குவாருள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்" என்றும் ஆன்றோர்கள அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ‡ அன்பு நிறை நன்மனம் பெற்று. — "ஆடகச்சீர் மணிக்குன்றேயிடையறு அன்புனக்கென், னூடகத்தே நின்றுருகத்தந்தருளெம் முடையானே." என்றும், "கருவுற்ற நாண் முதலாவுன் பாதமே காண்பதற்கு வுருகிற்றென் உள்ளமும் நானும்." என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. § நின்பணிக்காளானேனன். — "என் பேருங் கருணையாளனே போற்றி யென்னை நின் அடியன் ஆக்கினுய் போற்றி." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

* தொண்டர்க் கெளிய சுகவான் குமரவேல்
மிண்டர்க் கரியனிவன் மென்றுட்கைக்—கொண்டு
மனத் திருத்தி வைத்தேன் § மகிழ்ந்தினிது வாழ்வேன்
○ எனைத்தொடரும் வல்வினையே நீங்கு. உ௰௩.

---

* தொண்டர்க்கெளிய சுகவான் குமரவேல், மிண்டர்கரியனிவன் மென்றுட்கைக் - கொண்டு—மனத்திருத்திவைத்தேன்.— † கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானைக் கரவார்பால், ‡ விரவாடும் பெருமானை விடையேறும் || வித்தகனை, யரவாடச் சடை தாழவங் கையினிலனலேந்தி, யிரவாடும் பெருமானை யென் மனத்தே வைத்தேனே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. § மகிழ்ந்தினிது வாழ்வேன்.—"வாய்த்த நலமுடையவர் வாழ்வ ரொன்றே வந்து திருவடி தொழுதாடாய் பாம்பே." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ○ எனைத் தொடரும் வல்வினையே நீங்கு.—"செங்கண் விடை யண்ணலடி சேர்பவர் கடவினை கடருமுடனே." என்றும், "பொன்போல மிளிர்வ தோர் மேனியினீர் புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர், துன்பே கவலைபிணியென்றிவற்றை நணுகாமற் § றுரந்து கரந்துவிடீர்." என்றும், "எங்கள் பரமன், நதியொடு கொன்றைமாலை முடிமேல அணிந்தெனுளமே புகுந்தவதனாற், கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்களான பலவும், அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

† கரவாடும் = வஞ்சகஞ் செய்யும்.

‡ விரவாடும் = கலந்தாடும்.

|| வித்தகனை = அறிஞனை.

§ துரந்து கரந்து = ஓட்டியொழித்து.

$ முன்னாளின் தீவினைகள் முற்றும் ஒழித்தருளி
இந்நாளில் * நன்மௌனம் எற்களிப்பன்—‡ மன்னு () தச
நாதம் மிகப்பிறக்கும் நாதன் குமரவேல்
() பாதம் துணையென || நீ பற்று உ௰௪.

---

$ முன்னாளின் தீவினைகள் முற்றும் ஒழித்தருளி.—"முன்னைவினையின் முதலைக்களைந்து." என்றும், எனைத்தொடர்ந்து தொடர்ந்தெந்நாளும், வாதியா நின்றவினைப் பகையை வென்றவாழ்வே." என்றும், "முன்னைவினை யிரண்டும் வேரறுத்து முன்னின்றான், பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்,—தென்னன்—பெருந்துறையின் மேய பெருங்கருணையாளன், வருந்துயரந் தீர்க்கும் மருந்து". என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. * நன்மௌனம் —"ஆந்தை விறிட்டதுவும் அவ்வேடன் கொன்றதுவும், வேந்தன் மகன் மவுனம் வாய்விட்டதுவுஞ்—சார்ந்து நின்றோன்—கண்டுவந்து கூறியதுங் கழுவேறவிட்டதுகண், கண்டிருந்தும் பேசுவரோகாண்." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ‡ மன்னு = நிலைபெற்ற () தசநாதம்—"மணி, கடல், யானை, வார்குழல், மேகம்; மணி, வண்டு, தும்பி, வளை, பேரிகை, யாழ்; தணிந்தெழு நாதங்கள் தாமிவைபத்தும்; பணிந்தவர்க்கல்லாற் பார்க்கவொண்ணாதே." என்றும், "முத்தி பெறவேண்டுமென்றுற்றொனிநாதங்கேளு, முற்செனன தோஷமெல்லாம் பரிகாரமாகும் பத்தியுறும் பசிதாகம் நித்திரையும் போகும் பயமில்லை மரணமில்லை நரைதிரையுமில்லைச், சுத்தி செய்வாயிப்படியே புலன்பொறியை நீக்கிச் சுந்தரம்போல் ஏகாந்தச் சமாதியிலேயிருப்பாய்." என்றும், "வாய்முடி வழியோடே நாதங்கேளார், மவுன வித்தைபாசான்றால் தாண்டிக் காட்டில் மணிமுதலாய்த் தசநாதங் கேட்குந்தானே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. () பாதந்துணையென —"தனை நினையவல்லோர்க்கென்றும், பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானை." என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

|| நீ = மனமே

† பொன்னுலகும் மண்ணுலகும் போற்றுங் குமரவேல்
‡ தன்னுருவைச் சிந்தித்துத் தாடொழுவேற்—கெந்நாளுஞ்
செல்வம் வளர்ந்தோங்குஞ் சித்தி, முத்தி சேர்ந்து வரும்
வல்லாளர் § கண்டதிந் த மாண்பு. உ௰௫.

* சிந்தை அடக்கித் தியானிக்கும் வல்லமையைத்
தந்தாய் குமரவேல் ¶ தாட்டிகனே—சுந்தரனே
நல்லானே பாடுகின்றேன் $ நன்மோன வாழ்வுபெற
எல்லாம் § முன் விட்டகுறை எற்கு. உ௰௬.

---

† பொன்னுலகு மண்ணுலகும் போற்றுங் குமரவேல்.—"மண்ணும் விண்ணும் வந்து வணங்காவோ நின்னருளைக், கண்ணுறவுட் கண்டவரைக் கண்டாற் பராபரமே". என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ‡ தன்னுருவைச் சிந்தித்துத் தாடொழுவேற்—கெந்நாளுஞ்—செல்வம் வளர்ந்தோங்குஞ் சித்தி முத்தி சேர்ந்துவரும்—"அம்மானென $ உள்கித்தொழுவார்கட்கருள் செய்யும், பெம்மான் அவன்" என்றும், "தலையுங் கழுத்தும் உடம்பும் இவை செவ்வே தளராதேயிருக்கும், நிலையிருந்து கண்களைத் தன் மூக்கின் ♆ நுதிமேலே நிறுத்தி, அலையுங் கடல்போற் காமமும் மெய்ப்பயமுந் தன்னைவிட்டகல, உலையும் மனம் உள்ளடங்க எனையுணர்ந்தேயிருக்கும் அதுயோகம்". என்றும், "கருடனுருவங்கருதும் அளவிற், பருவிடந்தீர்ந்து பயங்கெடுமாபோல், குருவின் உருவங்குறித்த அப்போதே, திரிமலந்தீர்ந்து சிவனவனுமே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

§ கண்டது = அறிந்தது.
$ உள்கி = நினைத்து.
♆ நுதி = நுனி.

* சிந்தையடக்கி.—"சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும், மனமிறக்கக் கல்லார்க்குவாயேன் பராபரமே." என்றும், "வானென்ற பொருளென்ன எளிதோ ஐயா மகத்தான மனம் அடங்க எய்துங் காணே". என்றும், "வலுவென்ன மனத்

னுடைவனுத்தான் ஐயா மற்றதொரு வலுவில்லை." என்றும், "சகஸ்திரத்திற் கொலுவிருக்கும், குருவினுட பதத்தையுமே காணக்கூடும் அதுயோகம் அது தேகசித்தியாமே". என்றும், மனமது ஒன்றேயானால் மறுபிறப்பில்லைத்தானே." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. ¶ தாட்டிகனே = பலமுள்ளவனே. $ நன்மோன வாழ்வு.—"ஏற்கனவே முப்பதுக்குள் மவுனங்கண்டு இளவயதாயிருப்பார்கள் பெரியோர் மைந்தா, காக்கவே சற்குருவின் பாதங்கண்டு கருணைபெற அவர் பதத்தை வணங்கிப்போற்றித் தீர்க்கமுடன் பிரமத்தில் மனந்தான் செல்லச் சிவனுக்குச் சிவனாக இருக்கலாமே". என்றும், "உவமையுடன் நினைவுமேலிருந்தாற் சத்தியுண்மையாய் மேலிருக்குங்கேசரியிதாமே" என்றும், "ஆமேதான் கேசரி முத்திரைக்கு மைந்தா அரிதான யோகிகள் அஞ்சலியு மிகச்செய்வார், வேமேதான் ஆகாமியஞ் சஞ்சிதத்தினுடே. † வியனான பிராரத்துவமிதுவெல்லாந்தீரும், நாம் என்னும் ஆணவத்தால் பிரபஞ்சம் இதனால் நலமான விந்துவை யோனியிற் கவிழ்த்துவிட்டார்". என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. § முன்விட்ட குறை.—"பண்டு விட்ட குறையாற் குருச்சொல்லப் பலிக்கும் பாரு மெய்ஞ்ஞானமுஞ் சித்தியே". என்றும், "அறியவென்று ஆசைகொண்டால் வருமோ மைந்தா அவரவர்க்கு விட்டகுறை பாலே யெய்தும்," என்றும், "விட்டகுறை வந்ததென்றாற்றானே யெய்தும் விதியில்லா ரெத்தனைதான் வருந்தினாலும், பட்டு மனம் மாய்வதல்லால் வேறொன்றில்லை. ‡ பதமில்லார்க்குரைத்து மனம் பாழ்போக்காதே". என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

† வியனான = அதிகமான; ஒற்றையான

‡ பதம் = பக்குவம்.

† பாவச் செயற்கெலாம் பார்வை,முதற் காரணந்தான்
தேவ குமரவேல் செல்வ,நின்மேல்—ஆவலுடன்
‡ தோத்திர நூல் பாடித் தொழுவேன் சதாவெனைநீ
காத்தருளி ஆட்கொள்வாய் ✱ காண். உஎ.

* முக்கா லமுமுணரும் மோன குமரவேல்
தக்கோனே § வாசிநிலை தந்தருளுஞ்—சொக்கே, நின்
சித்தமகி ழப்பாடிச் சேவிப்பேன் ¶ மாண்பருளி
● நித்தமும்வாழ் என்மனத்துள் நீ. உஅ.

---

† பாவச்செயற்கெலாம் பார்வை முதற்காரணம்.—"முத்தனைய மூரலும் பவளவாயின் சொலும் முகத்திலகுபசு மஞ்சளும் மூர்ச்சிக்கவிரக § சன்னதமேற்ற விருகும்ப முலையில் மணிமாலை நால, வைத்தெமை மயக்கி யிருகண்வலையை வீசியே மாயாவிலாச மோகவாரி தியிலாழ்த்திடும் பாழான சிற்றிடைமடந்தையர் சிற்றின்பமோ, புத்தமிர்தபோகம் புசித்து விழியிமையாத பொன்னாட்டும் வந்ததென்றாற் போராட்டமல்லவோ பேரின்பமுத்தியிப் பூமியிலிருந்துகாண, எத்தனை விகாதம் வரும் என்று சுகர்சென்ற நெறியிவ்வுலகம் அறியாததோ இகபரம் இரண்டினிலும் உயிரினுக்குயிராகி யெங்கும் நிறைகின்றபொருளே." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ‡ தோத்திர நூல் பாடித் தொழுவேன் சதாவெனை நீ காத்தருளி யாட்கொள்வாய்.—"நாதமே நானுனக்கோரன்பனென்பேனுயினேன் ஆதலால் ஆண்டுகொண்டாய்". என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

✱ காண் = இடைச்சொல்.
§ சன்னதம் = ஆவேசம்.

* முக்காலமுமுணருமோன.—"காலமொரு மூன்றும் கருத்துணர்ந்தாலுமதை, ஞாலந்தனக்குரையார் நல்லோர் பராபரமே." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. § வாசிநிலை தந்தருளும்.—"காலைநேர் பெறவொட்டி யெகனலினை மூட்டி." என்றும், "மூலவெங்கனலினை முடுக்கிமூட்டுறு மேலுறும் அமிர்தினைமிசைதல் மேயினான்". என்றும், "தாலனை யோசமது செய்யவென்றாற் சாற்றுகிறேன் பாய்படுக்கை தள்ளு தள்ளு, ○ கூனை கடுஞ்சுமைகள் வெயில் நடக்கல் கொற்றவனே மனக்கவலை கூட்டங் கூடல், ‖ கானனைகள் அரக்குக் கஞ்சரவோடு கருதி யிந்தவகைகளெல்லாங் கடந்துதள்ளு". என்றும், "யாரப்பா கண்பார்வை யனைக்கண்ணுகும் அரகரா புருவமையங் குறியாம்பாரே".என்றும், "பாங்குடனே தண்ணூருட்டிப் பாத்திடாதே, காக்கவே நினைவ

தனை விட்டிடாதே கனகசபை நாட்டமதை மறந்திடாதே". என்றும், "வைவாயெழியிற்றே டெயிறென்றுதினி தினமைத்த வாசனத்தி,னிவ்வாறிருந்து மூவகைய பிராணயாமமியற்றுகவே".என்றும், "புத்தியுடன் பிரமத்திற் புகுந்துகொண்டாற் பூலோகமெல்லாந் தான்பனிவாருன்னை". என்றும், "நன்னய மாயனுஷ்டானஞ் செய்தபின்பு நாயகனே மூதண்டலேகியங்கொள்". என்றும், "கனிரசம்போல் வாயுவும் புறப்பட்டுப்போனாற் கள்ளமனம் பொல்லாது பிடித்தாலுமே நில்லாது, புனிதமுடன் யோகில் மயங்காதிருந்தால் வாயுவும் புறப்பட்டுப்போகாது மனத்திடமுமாமே". என்றும், "ஆ மென்ற வாயுவது அடங்கிற்றுனால் அப்போது ஆள் முகமே () வர்ச்சிதந்தான் கண்டாய்." என்றும், "தீரப்பா பிராணயச்சமாதியிலேயிருந்து திடமாகப் பானுவைப்போல் ¶ அசங்காதிருக்கவேணும், ஊரப்பாயிருந்தாலென் காட்டில் வாழ்ந்தென் உண்மை சிவயோகமதில் உறைத்திடாயே". என்றும், போமப்பா சிவயோகி மனது நொந்தாற் பொடியாக அண்டரண்டஞ் சத்துருவும் நாசம்". என்றும், "திறஞ்சேர நினைவற்று க்ஷணநேரமிருந்தாற்றிவ்விய சந்திரபானததைச் சூரியபானங்கொள்ளும்". என்றும், "துயிலும் உணவுஞ் செய்தொழிலுமிகாமே குறைந்து தோன்றுமே, பயிலும் அவனே யோகத்தைத் தன்பாற் ✠ படுக்கும் பான்மையான்". என்றும், "உண்டியினில் மிகுவார் உளண்டுறப்பார் மிக்குறங்கிடுவார், கண்டுயிலையறத் துறப்பாரவர்க்கிது கைவாராதால்". என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்ற காண்க ⁋ மாண்பு=மாட்சிமை; மகிமை. ● நித்தமும் வாழென் மனத்துணி.—'கடிமலர் தூய்த்தொழும் அடியார்நெஞ்சினுள்ளே கன்றுப்பூர் நடுதறியைச் காணலாமே". என்றும், ∵ "பேணி நினைந்தெழுவார் தம்மனத்தினுள்ளே, யிருந்த மணிவிளக்கதனை". என்றும், "இன்பப்பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந், துன்பந் துடர்வறுத்துச் சோதியா—யன்பமைத்துச்—சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே, ± ஊராகக்கொண்டான் உவந்து". என்றும், "இறையோன், பெருந்துறையுன்மேய பெருமான் பிரியா, திருந்துறையும் என்னெஞ்சத்தின்று". என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

o கூறுன = வளைவான.
‖ கானுன=வாசமுள்ள
() வர்ச்சிதம்=ஸ்திரம்.
¶ அசங்காது = அசையாது.
✠ படுக்கும்=அகப்படுத்தும்
∵ பேணி=விரும்பி.
± ஊராக=நாடாக.

பானாவால்ப் பாடிப் பணிந்து நினைந்துருகி
மோன குமரவேல் முத்தா, என்—றேநாளுந்
தோத்திரங்கள் செய்வேன் ¶ நின்தொண்டர் தமைமதியார்
§ காத்திரத்துக் குண்டோ கதி. ௨௰௯.

$ சிங்கப் பிரானே,நற் றேவா குமரவேல்
தங்கப் பொருப்பேயித் தாரணியில்—§ எங்கெங்கும்
‡ பூதம ஐந்தும் உட்கலந்த * பூரணன் நீ என்னுள்வளர்
() நாதனும் நீ ✠ நின்பெயரே நன்கு ௩௰.

---

¶ நின்தொண்டர் தமைமதியார் காத்திரத்துக்குண்டோகதி. "நின்னை யுணர்ந்தோர் கடமை நிந்தித்த பேயறிஞர், என்ன கதி பெறுவாரெந்தாய் பராபரமே". என்றும், "பெரியோர்கள் திருவுள்ளம் பேதித்தாலெப்பொருளும் பேதியாதோ". என்றும், "ஈசனடியாரிதையங் கலங்கிடிற், றேசமுநாடுஞ் சிறப்பும் அழிந்திடும், வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும் நாசமதாகும் நம்நந்தியாணையே". என்றும், "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேனுங் காத்தலரிது." என்றும், "வெற்றியுள்ள பெரியோரை யிகழவேண்டாம்". என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

§ காத்திரம் = உடல்; சரீரம்.

$ சிங்கப்பிரானே = சிங்காசனே. § எங்கெங்கும்.—"நவிலுங்கால் மேல், கீழ், நடு, பக்கம் எங்குஞ் சிவமொழிய வேறில்லைத் தேர்". என்றும், "அடிபொடு நடுவீறானாய் போற்றி". என்றும், ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ‡ பூதமைந்துமுட்கலந்த பூரணன் நீ.—"மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத், தன்னுருவில் மூன்றாய்த் தாழ்புனலில் நான்காய்த் தரணி தலத் தஞ்சாகி". என்றும், "உம்பருள்ளாய் மன்னும் உத்தரகோசமங்கைக்கரசே, அம்பரமே, நிலனே, யனல், காலொ, டப்பானவனே". என்றும், "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி, நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி, தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி, வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி, வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

குறிப்பு.—(1) ஆகாயத்தில். பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய நான்கும் அதிரிசிமாய்ப் போகக் காரண குணமாகிய சத்தம் ஒன்றுந் திரிசியமாம்.

(2) வாயுவில். ரூபம், ரசம், கந்தம் ஆகிய மூன்றும் அதிரிசியமாய்ப் போகக் காரண குணமாகிய பரிசமும், தன் குணமாகிய சத்தமும் ஆகயிரண்டு மதிரிசியமாம்.

(3) தேயுவில். ரசம், கந்தம் ஆகிய இரண்டும் அதிரிசியமாய்ப் போகக் காரண குணமாகிய சத்தமும், பரிசமும், தன் குணமாகிய ரூபமும் ஆக மூன்றுந் திரிசியமாம்.

(4) அப்புவில். கந்தம் ஒன்று அதிரியமாய்ப் போகக் காரண குணமாகிய சத்சம், பரிசம், ரூபம் தன் குணமாகிய ரசம் ஆக நான்கும் திரிசியமாம்.

(5) பிருதிவியில். காரண குணமாகிய சத்தம், பரிசம், ரூபம், ரசம் இந்நான்கு தன் குணமாகிய கந்தம் ஆக ஐந்துந் திரிசியமாம்.

* பூரணன் = கடவுள். () நாதன் = கடவுள். ✠ கின்பெயரே.—"ஓம் என்கின்ற ψ தனியெழுத்தும் உரைத்தற்கரிய தத்பதமுந், ¶ தாமங்கமழுந் £ தார்மார்பா சத் என்கின்ற தனிப்பதமும், ஆமென்கின்ற இவை மூன்றும் △ அறிவின் பெயர்" என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

ψ தனியெழுத்து—ஏகாக்ஷரம்.
¶ தாமம்—மணிவடம்.
£ தார்—பூமாலை.
△ அறிவின் பெயர்—பரப்பிரமத்தின் நாமங்களாம்.

சித்தனே ψ மூலகுரு செல்வா குமரவேல்
அத்தனே பூரணனே ஆரியனே—முத்தனே
நல்லானே ‡ மோனநிலை நாயேறகுத் தந்தருள்வாய்
§ எல்லாம்சம் பூரணமாம் எற்கு, ௩௰௧.

பாராரும் விண்ணோரும் பாதாளத் தாரும்பின்
$ யாராலுங் காண்டற் கரியான்கேள்—நேரே நீ
‡ விஞ்சைகிரி மேவில் குமரவேல் வீற்றிருப்பன்
அஞ்சல், அஞ்சல் என்பன்நீனே ஆங்கு. ௩௰௨.

---

ψ மூலகுரு—ஆதிக்குரு. ‡ மோனநிலை —'மோனமென்பது ஞானவரம்பு". என்றும், பேசாவநுபூதி பிறந்ததுவே" என்றும், "சித்தம்வாய்ந்த பொருளில்லையெனிற் பேசாமை நின்றநிலைவாய்க்குமன்றே". என்றும், "வாய்பேசாதே மௌனம்விடாதே வாது களொன்றுங் கூறாதே". என்றும், "யாரப்பா அறிவார்கள் மௌனத்தோர்கள் ஆயிரத்திலொருவனென்று அறிந்துகொள்ளே". என்றும், ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. § எல்லாஞ் சம்பூரணமாம்.—"நிறைகுடந்தான் நீர்கொளுமோ நிச்சயமாமோன முறையுணர்ந்தார் யாதை முயல்வார்—பிறையணிந்த—மிக்க கைலாயமலை வித்தகனே வேதியனே, * செக்கரணி மேனியனே செப்பு". என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. * செக்கரணி = சிவப்புநிறைந்த.

$ யாராலுங் காண்டற்கரியான்.—"ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுருவுடைய சோதி". என ஆன்றோர் வருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ‡ விஞ்சைகிரிமேவில்.—"பாரடா விஞ்சை மந்திரமென்பார் வீணே நோய்ப்பாயடா விஞ்சைகிரிதன்னில் மைந்தா, ஆரடா சென்றேறிப் பார்க்கும்போது ○ அதீதமுள்ள விஞ்சை மந்திரம் அனந்தங்காட்டும், நேரய்யா சிருஷ்டிப்புச் சங்காரங்கள் நிமிஷத்திற் செய்திடுவாய் நிலைமைக் கண்டால், § வீரய்யா அமிர்தமுந்தான் குமிழிபாயும் வேரில்லா மரக்கனியும் உண்ணலாமே". என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

○ அதீதமுள்ள = எட்டாத தன்மையுள்ள.
§ வீரய்யா = வீரியமுள்ளவனே.

மின்னார் மணிமுடியான் வேதன் குமரவேல்
பொன்னார் பதம் இரண்டும் ‡ பூமலராற்—பன்னாளும் [யின்றி
பூசிப்பேன் || போற்றிசெய்வேன் △ போதமிகுந் □ தாண்மை
நேசிப்பேன் வாழ்வேன் நிசம். ௩௭.

---

‡ பூமலரால் பன்னாளும் பூசிப்பேன்.—"பல்லூழி காலம் பயின்றரனையற்சித்தால், நல்லறிவு சற்றே () நகும்" என்றும், "கழலடி பரவுந்தொண்டர்க்கமைவிலா அருள்கொடுப்பான் ஐயன்". என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. || போற்றி செய்வேன்.—"விடையேறும் ஈசன் பாதம் விரும்பிய பெரியோர் பின்னே, தடையறத் திரிந்து ஞான சாதனம் பெற்று நீதான் புடைசூழும் நாகை நாதர் பொன்னடி போற்று நெஞ்சே". என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க. △ போதமிருந்து.—"ஏது வந்தும் ஏதொழிந்தும் என்னது யான் என்னார்கள், போத நிலைகண்ட புலத்தோர் பராபரமே." என்றும், "பொங்கிய நின்றண்ணருளைப் ♆ புட்கலமாய்ப் பெற்றவர்கட், கெங்கெழுந்தென் ஞாயிறிடம் பாய்பராபரமே" என்றும் ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. □ ஆண்மையின்றி.—"ஆங்காரத்தால் வந்த கேடு அதையறியாமற்றிரிந்துதே சுழிகெட்ட மாடு." என்றும், "நாயனையறிந்திடாமல் நானெனும் ஆண்மையாலே, ஆயனில்லாத காலியாகி நீ யலையலுற்றாய்." என்றும், "வண்டுளருந்தண்டுளாய் மாயோனிறுமாப்பும், புண்டரீகப் போதுறையும் புத்தேளிறுமாப்பும், அண்டர் தொழவாழுன்னிறுமாப்பும் ஆலாலம், உண்டவனைப் பூசித்த பேறென்றுணர்ந்திலையால்." என்றும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருக்கின்றனர் காண்க.

() நகும் = ஒளிவிடும்.
♆ புட்கல = நிறைவும்.

கொம்பில் தனித்தேன், இக் கோலக் குமரவேள்
‡ வம்பர்க் ககப்படா மாபலவான்—எம்பெருமான்
ψ ஒப்புவமை யாரும் உரைக்கவொணா ஐக்கியன்தாள்
§ எப்பொழுதுங் கைதொழுவேன் யான். ௩௪.

¶ ஏதேது சென்மம் எடுத்தாலும் யான்மறவேன்
நாதன் குமரவேல் நற்பாதம்—மாதவமே
எந்நாளுஞ் செய்வேன் நான் $ எவ்வுயிரும் என்னுயிர்போல்
பண்ணுளுங் காப்பேன் ✠ பரிந்து. ௩௫.

175418 600 008.

---

‡ வம்பர்க்ககப்படா மாபலவான்.—“பொய்யன்பர்க்கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும் ஐயன்”. என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ψ ஒப்புவமை யாருமுரைக்கவொணா வைக்கியன்.—“அப்புமுப்பும்போன்ற ஐக்கியபரானந்தர்தமக், கொப்புவமையுண்டோ நீ யோதாய் பராபரமே”. என்றும், “நாழியுப்பு நாழியப்பு நாழியான வாறுபோல்”. என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. § எப்பொழுதுங் கைதொழுவேன்.—“துன்பமின்றித் துயரின்றி யென்றும் நீர், இன்பம் வேண்டி லிராப்பகலேத்துமின்”. என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

¶ ஏதேது சென்மமெடுத்தாலும் நான் மறவேன்.—“புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே, வழுவாதிருக்க வரந்தரவேண்டுமிவ்வையகத்தே” என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. $ எவ்வுயிரும் என்னுயிர்போல்.—“எவ்வுயிருந் தன்னுயிர்போலெண்ணி யிரங்கவுநின் றெய்வவருட் கருணை செய்யாய் பராபரமே”. என்றும், “எவ்வுயிருந் தன்னுயிர்போலெண்ணுந் தபோதனர்கள், செவ்வறிவை நாடி மிகச் சிந்திப்பதெந்நாளோ”. என்றும், “கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற், றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே”. என்றும் ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ✠ பரிந்து = இரக்கம்வைத்து.

உடலுள் உயிர்போன்ற உள்ளொளியை நாடும்
அடியர் மனம்வாழ் அவன் மெய்—* வடிவெழுத
ஒண்ணுக் குமரவேல் உத்தமர்க்கு () யோகசித்தி
|| தண்ணளியால் இங்கருள்வன் தான். ௩௰௬.

---

* வடிவெழுதவொண்ணு.—"அவனருளே கண்ணுகக்காணினல்லால்; இப்படியன், இந்நிறத்தன, இவ்வண்ணத்தன், இவன் இறைவன், என்றெழுதிக் காட்டொணுதே". என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. () யோகசித்தி.—"தானென்ற ஆணவத்தைவிட்டு மைந்தா சாதகமாய் ● பிரமசாரியுமேயானுல், வானென்ற ஆத்மாவையறிந்துகொள்வான் வருஷமொன்றில் யோகசித்தியாகுங் கண்டாய்". என்றும், "கருதரும் யோகம் பயின்று கைவந்தோரல்லவர் பரத்திணைக் காணுர், திரிதருவளியை யடக்கினல்லாது செவ்வனே மனம் நிலைபெறுதால்". என்றும், "இணையவாற்றுலி யோசங்களியற்றி யுடலமிகவருந்தி, நினைதற்கரிய தனிமுத்தி நெறியினடைக". என்றும். ○ "அத்திநின்ற ஆகாமிய சஞ்சிதமாம் பிராரத்துவம் யாருக்கு அடுக்குமென்றுல் யோகவரை யெய்தும், முத்தியென்ற ஞானத்திற் புகுந்தோர்க்கையா மூன்றுமில்லைப் § பிரபஞ்சம் முழுதும் போச்சே". என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. || தண்ணளியால்=இரக்கம்வைத்து; கிருபைவைத்து.

● பிரமசாரி=கற்று விரதங்காத்து விவாகமின்றியிருக்கின்றவன்.

○ அத்திநின்ற=பாக்கியிருந்த.

§ பிரபஞ்சம்=உலகம், மாயை

† எந்த நிலைமையிலும் என்குருதாள் யான்மறக்கேன்
சிந்தை அவன்பாற் செலுத்திநிற்பேன்—சந்ததமும்
இன்ப மொழியுடையான் ஏகன் குமரவேல்
§ அன்பர் பயமிலரோ ஆம். ௩௭.

$ பாலினுள்நெய் போலும் படுவிறகுட் டீபோலுஞ்
சீலன் குமரவேல் □ தேவாதி—|| ஞாலமெங்கும்
எல்லா உயிரினுளும் எந்நாளும் வாழ்வன், என்றே
நல்லோர் மொழிவவென ‡ நாட்டு. ௩௮.

---

† எந்த நிலைமையிலு மென்குருதாள் யான் மறக்கேன், சிந்தையவன் பாற்செலுத்தி நிற்பேன்.—"எத்தொழிலைச் செய்தாலும் ஏதவஸ்தைப்பட்டாலும், முத்தர்மனமிருக்கு மோனத்தே— வித்தகமாய்க்— = காதி விளையாடி யிருகை வீசி வந்தாலுந், தாதிமனம் நீர்க்குடத்தே தான்." என்றும், "இருக்கினு நடக்கும் போது மிரவுகண் டுயிலும்போதும், பொருக்கென விழிக்கும்போதும் பொருந்தியூண்டுய்க்கும்போதும், முருக்கி தழ்க்கனிவாயாளை முயங்கி நெஞ்சழியும்போதுந், திருக்களாவுடைய நம் பாசிந்தையுன் பாலதாமே." என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

§ அன்பர் பயமிலரோயாம்.—"மார்க்கண்டர்க்காக மறலிபட்ட பாட்டை ※ யுன்னிப், பார்க்கிலன் பர்க்கென்ன பயங்காண் பராபரமே." என்றும, "நெஞ்சமே, வண்டுலா மலர்ச்செஞ்சடையே கம்பன், தொண்டனாய்த்திரியாய் துயர்தீரவே" என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

= காதி=கதை சொல்லிக்கொண்டு.

※ உன்னிப்பார்க்கில்=நினைத்துப்பார்க்கில்.

$ பாலினுணெய்போலும் படுவிறகுட் டீபோலும்.—"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல, மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. □ தேவாதி=கடவுள் || ஞாலமெங்கு மெல்லாவுயிரினுளு மெந்நாளும் வாழ்வன்.—"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி, யூனாகி யுயிராகி யுண்மையு மாயின்மையு மாய்க், கோனாகி யானெனத தென்றவரவரைக் கூத்தாட்டு, வானாகி நின்றாயையென் சொல்லி வாழ்த்துவனே". என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின் றனர் காண்க ‡ நாட்டு=தாபி.

‡ பதம்மூன்றும் ஒன்ருென்ருய்ப் பற்றுபவர் நான்காம்
பதமான ஞானநிலை பற்றி—நிதமும்
பணிவார் குமரவேல் பாதமலர் மோன
மணிவிளக்காய் வாழ்வர் மகிழ்ந்து. ௩௬.

மூவா முதல்வா,மா முத்தா குமரவேல்
தேவா § மூலக்கனலைச் சென்றெழுப்பி— ஆவலுடன்
† மூன்ருன மண்டலத்தை முட்டவே ¶ ஊதுகின்ற
ஆன்ருேர்க் கிணை, அவரோ ஆம். ௪௰.

---

‡ பதமூன்று மொன்ருென்ருய்ப்பற்றுபவர் நான்காம் பதமான.—"விரும் புஞ்சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்; அரும்பு, மலர், காய், கனிபோலன்ருே பராபரமே." என்றும், "பதம் மூன்றுங்கடந்தவர்க்கு மேலான ஞான பதப்பரிசுகாட்டி." என்றும் ஆன்ருேர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

§ மூலக்கனலைச் சென்றெழுப்பி.—"கால்பிடித்து மூலக் கனலை மதிமண்டலத்தின், மேலெழுப்பிற்றேகம்விழுமோ பராபரமே." என ஆன்ருேர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க." † மூன்ருன மண்டலம்=சந்திரமண்டலம்—மூன்ருன மண்டலத்தை முட்டவே பூதுகின்ற —"மவுனியாய்க்கண்மூடியோடு மூச்சைக் கட்டிக்கலாமதியை முட்டவே மூலவெங்கனலினையெழுப்ப நினைவும் பூணிலேன்." என ஆன்ருேர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ¶ ஊதுகின்ற.— $ "கூடமெடுத்துக் குடிபுக்க ‡ மங்கையர், ஓடுவர் மீளுவர் பன்னிரண்டங்குலம், = நீடுவர் எண்விரல் △ கண்டிப்பர் நால்விரல், கூடிக்கொளிற்கோல அஞ்செழுத்தாமே." என்றும்,"மேலென்ன இருக்கையிலும் நடக்கும்போதும் ‖ வெருளாமற்சரங்களை நீ விடாமலேற்று, நாலென்ன எட்டென்ன எல்லாம் ஒன்று'. என்றும், "சிவகலை தானிருந்து எட்டும் நாலுஞ் சிவசிவா ¶ புறப்பட்டு நாலும் பாழாய்ச் சிவகலை மதிபோலே சிறணித்துசசகத்திலே மானிடர்கள் மாண்டார் ஐயா, சிவகலையானதுவே மூலம் மூலம்" என்றும் ஆன்ருேர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

$ கூடமெடுத்து=வீடுகட்டி.
‡ மங்கையர்=பன்னிரண்டு வயது பூரணமான பெண்.
= நீடுவர் = நிலைத்திருப்பர்.
△ கண்டிப்பர்=பிரிவுபடுவர்.
‖ வெருளாமல்=அஞ்சாமல்.
¶ புறப்பட்டு=வெளியில் வந்து.

தவம்புரிந்து ‡ தீதொருவித் தாளிணையைப் போற்றிச்
சிவமயனே என்னுமெனைத் தேடி—நலமிதிகள்
¶ மிக்கநல பொன், அளிக்க $ வித்தன் குமரவேல்
எக்காலுங் காத்திருப்பன் இங்கு. ௯௧.

தெருளுடைய மேலோர் சிறியோரை, £ நோக்கில்
△ மருளுடையார்க் கக்குணங்கள் மாறி—அருளுடையார்
ஆவார் குமரவேல் அவ்வாறே ‡ துட்டர்க்கும்
ஈவான்பல் நற்குணங்கள் ஈங்கு. ௯௨.

---

‡ தீதொருவி = தீயசெய்கைகளை விலக்கி.—"நெஞ்சே, யொருத்தருக்குந் தீங்கினைபுன்றே." என்றும், "மேதினியிற் பாவியென்ற நாமம்படையாதே." என்றும், "மறந்தும் பிறன்கேடு சூழற்கசூழின், அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன்கேடு." என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ¶ மிக்க நலபொன்னளிக்க.—"அறன் ஈனும் இன்பமும் ஈனுந்திறன் அறிந்து, தீதின்றி வந்த பொருள்." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. $ வித்தன் = தவமுடையவன்; உபகாரி.

£ நோக்கில் = கடாக்ஷித்துப்பார்த்தால். △ மருளுடையார்க் கக்குணங்கள் மாறி—அருளுடையார்—ஆவார்.—$ "கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற, அந்தணனைத் தொழுவார் * அவலம் அறுப்பாரே". என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. ‡ துட்டர்.—"ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பர் ¶ உற்றுப்பெற்ற தாயாரை வைவர் சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்க, ளாயார் பிறர்க்குபகாரஞ்செய்யார் தமையண்டினர்க்கொன், றீயாரிருந்தென்ன போயென்ன காண் கச்சியேகம்பனே". என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

$ கொந்து = பூங்கொத்து + அணவும் = நெருங்கியிருக்கும்.
* அவலமறுப்பார் = கேட்டை யொழிப்பர்.
¶ உற்றுப்பெற்ற = புலனடக்கிப்பெற்ற.

திக்கெலாங் கீர்த்தி சிறக்கவாழ் வுற்றவரும்
மிக்கோன் குமரவேல் மெய்ப்பணியை—எக்காலும்
வேண்டி () அவன் சந்நிதிமுன் வீழ்ந்தெழுந்து நாதா, என்
ஆண்டவ, என் றோலமிடு வார். சடுங.

பேதம் அபேதம்இலாப் பேரருளே மாயோகா
நாத குமரவேல் நன்மணியே—மாதவனே
சிற்பர, யான் ± அன்பு சிறந்துய்யும் நல்வாழ்வை
எற்கருள்வாய் எந்நாளும் ஈங்கு. சடுச.

---

() அவன் சந்நிதிமுன் வீழ்ந்தெழுந்து நாதாவென், ஆண்டவ, என்றோலமிடுவார்,—"குற்றாலத்தமர்ந்துறையுங் கூத்தாவுன் ✠ குரைகழற்கே, கற்றாவின் மனம்போலக் கசிந்துருகவேண்டுவனே". என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

✠ குரை = எழுத்திலா வோசையுள்ள.

± அன்புசிறந்து —"அன்பு சிவம் இரண்டென்பரறிவிலர், அன்பே சிவமாவதியாரும் அறிகிலர், அன்பே சிவமாவதி யாரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே". என்றும், "இன்பக்கடலிற் புகுந்திடுவானிரவும் பகலுந் தோற்றமல், அன்பிற் கரைந்து கரைந்துருகி யண்ணுவரசேயெனக் கூவி". என்றும், "கல்லேன் மலமேன் கனிந்த அன்பே பூசையென்ற, நல்லோர் பொல்லாவென்னையு நாடுவரோ பைங்கிளியே". என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

வானோர் புகழ்ந்து வணங்குங் குமரவேல்
△ தானோர் குருவெற்குச் சாற்றுங்கால்—நான் இந்தத்
¶ தோத்திர நூல் பாடித் தொழுதேன் இதனால்,இக்
காத்திரத்தே சித்தியுறுங் காண். சடு.

பொல்லாத மூடர் ¶ புறங்கூறும் பாவிஎண்ணஞ்
செல்லாத வாறவரைச் சீர்திருத்திப்—பல்காலும்
நல்லபுத்தி அன்னோர்க்கி நாதா குமரவேல்
பல்லோர் பணியும் பர. சசு.

‡ வஞ்சகமுஞ் சூதும் மறைத்தென்முன் நல்லவர்போல்
பஞ்சரித்துப் பேசி, அப்பால் பாதகங்கள்—அஞ்சாது
சொல்லவெணும் இட்டத் துரோகிகட்குக் குமரவேல்
§ நல்லுணர்வு கற்பிப்பாய் நன்கு. சஎ.

---

△ தானோர்குரு.—இதனால், இத்தோத்திர நூல் இயற்றிய காலத்தில் ஸ்ரீ வயித்தியலிங்கநாதனும் அடியேனுக்கு ஒரு குரு நாதனாக எழுந்தருளியிருந்ததைக்குறிப்பாய் வெளிப்படுத்துகின்றது. ¶ தோத்திர நூல் பாடித்தொழுதேன்.—"பாட்டிற்கின் புறு குருபரன்'.' என்றும், "பாடுவார் பசி தீர்ப்பாய்". என்றும், "பன் மாலைத்திரளிருக்கப்பாமாலைக்கே நீதான் பட்சம்." என்றும், "நாவ ழுத்துஞ் சொன்மலரோ நாளுதிக்கும் பொன்மலரோ, தேவை யுனக்கின்னதென்று செப்பாய் பராபரமே." என்றும் ஆன்றோர் கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

§ புறங்கூறும்.—"அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன், புறங்கூறானெனல் இனிது." என்றும், "புறஞ்சொல்லித்திரிவாரோ [illegible]ணங்கவேண்டாம்." என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக் கின்றனர் காண்க.

‡ வஞ்சகமுஞ் சூதுமறைத்தென்முன் நல்லவர்போற் பஞ் சரித்துப்பேசி.—"வஞ்சகம்பேசேல்." என்றும், "வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள், அஞ்சுமகத்தே ○ நகும்." என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க. § நல்லுணர்வு =நல்ல அறிவு.

○ நகும்=சிரிக்கும்; இகழும்.

தலைவன் குமரவேல் தஞ்சமெனும் என்மேல்
புலையர் புறங்கூறும் புன்சொல்—நிலையாது
கோளும் பலியா ‡ குபேரன்போல் வாழ்வுபெற்றெந்
நாளும் மகிழ்ந்திருப்பேன் நான். சஎஅ.

∵ கண்ணே மணியே கதியளிக்குங் கற்பகமே
விண்ணோ குமரவேல், வேந்தே, நல்—அண்ணு
$ மனதடக்கம் உள்ளோரைக் கண்டவுடன் வந்தித்
தெனதுகுல தெய்வமென்பேன் யான். சஎகூ.

நித்தமும்நின் சந்நிதிநேர் நின்று குமரவேல்
அத்தா,என் றோலமிட்டு அன்புடனே—பத்திமிக்கு
இந்நூல்,ஐம் பான்வெண்பாக் கொண்டேத்து வோரொன்றும்
$ சின்மயமாய் வாழ்ந்திருப்பர் தேர்ந்து. ருo.

---

‡ குபேரன்போல் வாழ்வுபெற்று.—"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து தரணியொடு வானாளத்தருவர்." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

∵ கண்ணே மணியே கதியளிக்குங் கற்பகமே.—"என் கற்பகமே, கண்ணே, கண்ணிற் கருமணியே, மணியாடுபாவாய் காவாய்." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

$ மனதடக்கமுள்ளோர்.—"அடக்கமுடையார் அறிவிலர் என்றெண்ணிக், கடக்கக் கருதவும் வேண்டா." என்றும், "நந்தி யிருப்பது நடுமண்டலத்துள்ளே, நாராங்கியில்லாமல் நால் ஐந்து வாசல், நாராங்கி பூட்டி நடுவுள்ளிருப்பார்க்கு, வேதாவினுலை வீணுலையாமே'.' என்றும், "புலன் ஐந்து வீதியில் எவயாளி பாயும் புரவியெனும் மனதை யொருமைப்படுத்தி." என்றும், "பிறப்பையும் இறப்பையும் அறுத்துவிட யான் பெருமருந்தொன்று சொல்வேன் பெட்புடன் கேளாய், சிறப்புடன் மனப்பூட்டுஞ் சிந்தைக் கதவுந் திறந்திடும் வகையறிந்நாடாய் பாம்பே." என்றும் "வாய்ச்சமர்த் தப் பேசாதமவுனத் ℘ தூன்று." என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க,

℘ ஊன்று = இருகப்பிடி.

$ சின்மயம் = அறிவுச்சொரூபம்.

தவராச சிங்கம் குமரவேல் தாதை
சிவபரனும் வைத்தியப்பன் செல்வர்—இவர்கள் பெயர்
நித்தம் சதா ‡ செபிப்போர் நீடாயுள் யோகம் எய்தி
முத்திபெற்று வாழ்வார் மொழி. ருகெ.

‖ அறிந்தும் ✠ மறந்தும் † அறியாமை யாலும்
§ மறஞ்செய் தவரும் வணங்கிற்—சிறந்த முத்தர்
∵ இவ்விருவர் மன்னிப்பர் என்று குமரவேல்
செவ்வடிக்கீழ் வாழ்வாய் $ திறம். ருஎ.

---

‡ செபித்தல்=மந்திரமுச்சரித்தல்.—"பத்து இலக்ஷத்தில் மந்திரஞ்சித்தியாம் பயின்ற மூவைந்திற்பற்றறுந் தீவினை, ஒத்த முப்பதில் ¶ முப்பிணி நோயறும் ஓங்கும் நாற்பதில் ✠ வாசாமகோசரம், அத்தாணே அறுபதி லக்ஷத்தில் ஆயிசு △ வர்த்தனம் ஆகுமென்றேயறி, முத்தியாகும் எழுபதில் எண்பதில் யோகியாவன் பிறப்பறும் நூறுமே." என ஆன்றோர் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

¶ முப்பிணிநோய் = ஆணவம், காமியம், மாயை.

✠ வாசாமகோசரம் = வாக்குக்கெட்டாமை; அதாவது ஒருவனுக்கு வாக்கினுற் பவுஷணம், பாக்கியமும் அளிக்கும் வல்லமை.

△ வர்த்தனம் = பெருகுகை.

‖ அறிந்தும் = பாவச்செய்கையென்று தெரிந்துகொண்டும்.

✠ மறந்தும் = பாவச்செய்கையென்று தெரிந்ததை மறந்துவிட்டும்.

† அறியாமையால் = பாவச்செய்கையென்று தெரியாமலே.

மறம் = பாவம்.

∵ இவ்விருவர்.—51-வது செய்யுளில் தெரிவித்திருக்கின்ற ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்; ஸ்ரீ வயித்தியலிங்க சுவாமிகள்.

$ திறம் = உறுதி.

காவலனே நாதா குமரவேல் கர்த்தாவே
பாவலனே சீராளா பத்தர்பணி—தேவா
அழிவில்லா ஞான அருட்கடலே * யோக
வழியனைத்தும் எற்கருள்செய் வாய்ந்து. ருகூ.

பொல்லாரும் வந்து குமரவேல் பூசைசெய்து
வல்லானே என்றுதொழில் வாழ்வுறுவர்—‡ நல்ல
அறிமுகத்தோர் தப்புதற்குப் போர்க்களத்தில் அன்பன்
குறிவிலக்கல் போலெனநீ கூறு. ருசெ.

---

* யோகவழியனைத்தும்.—“வழியோடே யேறப்பா வாசி கொண்டு உளதிமனஞ் செவ்வே நெட்டிட்டுக் கலந்து வறும்.” என்றும், “கூடியே புறவுசெய்ய அறியாத் தோஷம் கும்பிடும் ஓர் இடம் அறியாத் தோஷம்பாரே.” என்றும், “பிராணன் அபானனை, வவ்வி விழுங்கப்பட்டதெங்கே அந்தவன் பதம் உற்றுற் பின்னை வருமோ சென்மம்.” என்றும், “ஆவது ஞானத்துக்காதியாம் யோகந்தான், ஆவது யோகத்துக் காதியாம் வாசிதான்.” என்றும், “பாராய் சுவாசம் பன்னிரண்டங்குலஞ், சீரான நாலுஞ் சிதறவொட்டாரே, சிதறவொட்டாரே சிவயோகி.” என்றும், “பிறக்கும்போதடைத்த வாசலிறக்குமட்டுந் திறப்பதில்லை.” என்றும், “இருகாலிற் பெருவிரலின் மேலே நின்று × × × × நடுவிலொரு கத்தரிக்கோல் மாறலாகி.” என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

‡ நல்ல அறிமுகத்தோர் தப்புதற்குப் போர்க்களத்திலன்பன் குறிவிலக்கல்.—இரண்டு கூட்டத்தார்கள் ஒருவரையொருவரெதிர்த்துச் சண்டை நடத்தும்பொழுது ஒரு கூட்டத்தில் நிற்கின்ற ஒருவனுக்கு நேராய் எதிர்க்கட்சியில் நிற்கின்றவன் தன்னுடைய நெருங்கின சிநேகிதனாக இருக்கும்படி சில சந்தர்ப்பங்களில் நேரிடுமானதால் அப்படிப்பட்ட தருணங்களில் தன்னுடைய சிநேகிதனுடைய உயிரைப் பாதுகாக்கும்பொருட்டு உள்ளன்பால் அச்சிநேகிதனுக்கு அடுத்துப் பக்கமாய் நிற்கின்றவன்பேரில் தன் கையிலிருக்கின்ற ஆயுதஞ் சாடும்படிக்குச் சற்றுச் சாய்த்துப்பிடித்தும் தன்னுடைய கடமையில் குறைவில்லாமலும் ஆயுதத்தை உபயோகப்படுத்துவான். அச்சிநேகிதன் ஆபத்துக்குத்தப்பித்துக்கொள்வான். இதுபோல இந்த ஸ்ரீ குமரவேல் நாதனை வணங்கினவர்கள் கொடிய பாதகங்களைச் செய்தவர்களாயிருந்தாலும் மன்னிப்புப்பெற்றுய்வார்களென்பது இந்த வாக்கியத்தின் கருத்தாயிருக்கின்றது என்று அறிந்துகொள்க.

பத்தர்க் கிரங்கிப் பழவினைகள் போக்கியருள்
சித்தர் இருவர் பெயர் செப்பக்கேள்—முத்தன்
குமரவேல் வைத்தியலிங்கக் கோமான் இவரே
நமதுகுல தெய்வம்,நிதம் § நாடு. ௫௰௫.

என்னிரண்டு நாதாக்கள் எந்தை குமரவேல்
சின்மயனும் வைத்தியலிங்கச் செல்வன், இன்னோர்—ந்திடுமுன்
என்தோத் திரநூல் இரண்டும் சதா † இசைத்துப்
பன்னாளும் வாழ்ந்திருப்பேன் பார். ௫௰௬.

இப்பாடல் தீர்த்தாரப் பன்சொற்றான் என்று மகிழ்
அப்பா குமரவேல் ஆண்டவனே—எப்போதும்
நல்வாழ்வு எற்களிப்பாய் நான்மகிழ்ச்சி பெற்றுய்வேன்
செல்வாக்குஞ் சீருஞ் சிறந்து. ௫௰௭.

அண்ணல் குமரவேல் அத்தன் அதிபெருகும்
வண்ணம், ஐம்பான் வெண்பாவாம் வாக்குரையை—எண்ணியன்
இப்பாடல் செய்தேன்யான் ஈதும் ‖ மதுரகவி [பாய்
செப்புவபோல் கொள்வான் ‡ திறம். ௫௰௮.

---

§ நாடு = (மனமே) விரும்பு.

† இசைத்து = பாடி.

‖ மதுரகவி செப்புவபோல் கொள்வான்.—"தேவரெலாந் தொழச்சிவந்த செந்தாண் முக்கட்செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப்பாக, மூவர் சொலுந்தமிழ் கேட்குந் திருச்செவிக்கே மூடனேன் புலம்பிய சொல் ¶ முற்றும்." என்றும், "நின்கோகனகத் தாள்வழுத்தும், மாமறைபோல் என் பாடல் △ வண்டமிழுங் கொள்வாயால்." என்றும் ஆன்றோர்கள் அருளிச்செய்திருக்கின்றனர் காண்க.

‡ திறம் = உறுதி.

¶ முற்றும் = முடிவுபெறும்.

△ வண் = தெளிவுள்ள.

நேயமுற்றி இப்பாடல் இன்மேல் உரைத்தேன் யான்
சேய்குற்றந் தாய்பொறுக்குஞ் செய்கைபோல்—நீயே
சகிப்பாய் குமரவேல் தப்புறினும் ‡ பேணி
மகிழ்ச்சியுறும் பேறருள்செய் வாய். ருசு.

---

‡ பேணி = காத்து.

ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்
தோத்திரவெண்பா
முற்றுப்பெற்றது.

12548

டார்லிங் பிரிண்டிங் பிரஸ், பாளையங்கோட்டை—1920